1972 டிசம்பர் 15]

ஆண்டிப்பட்டிக்கு அரசு மருத்துவமனை.

* 189 வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஆண்டிப்பட்டியில் அரசினர் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அத்தகைய செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசிலனையில் இல்லை.

Prevention of water and air pollution

* 190. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state the steps taken by the Government to prevent pollution of water and air in the State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டப் பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் நீரும், காற்றும் அவசியமாக இருப்பதால் இதைப்பற்றிப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கு மத்தியில் மாரல் வகுப்பு களில் இப்படிப்பட்ட பாடங்களை விளக்கிப் பொதுமக்களுக்குப் பயன் படும் வகையில் செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி மிகவும் பொதுத் தன்மை படைத்ததாக அமைந்திருக்கிறது. எந்த அளவிற்குப் பாடத்திட்டத்தில் புகுத்தப்படும் என்பதைப்பற்றி இனி மேல்தான் ஆலோசிக்க வேண்டும். ஆனால் இங்கே தரப்பட்ட கேள்வியும், விடையும் காற்று, தண்ணீர் கெடுவதற்கான காரணங் களைக் குறித்தவை. சிலவகைத் தொழில் வளர்ச்சி, அல்லது போக்கு வரத்துப் பெருக்கம் இவைகளினால் சென்னையில் காற்று தூய்மை கெடுவதை எந்த அளவிற்குத் தூய்மை கெடாமல் தடுக்க முடியும் என்பதுபற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் விளைவாகச் சில செயல்கள் அண்மையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

@ 414-ம் பக்கங்களில் இணைப்பு-1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.